**தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இந்த நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டை ஒத்திருந்தன என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 05/2022 சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் CIGAS டெஸ்க்டொப் உள்ளீட்டின் மூலம் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி எதுவித மாற்றங்களுக்கும் உட்படுத்தப்படாது பயன்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தினால் அந்த பிரிவிற்கு முரணாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் இணங்க முடியாது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்ககள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் | ரூபா 67,603,030 பெறுமதியான தொழிலாளர் பிரிவு, இழப்பீட்டு | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| 2022/05 சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் (ACA-சீ) பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், காசுப் பதிவுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | ஆணையாளர், விளைதிறன் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய பிரிவுகளின் கூட்டுத்தொகை ஆகும். | கணக்ககள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றில் போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் இயந்திர்கள் ஆகியவற்றின் மீதிகள் முறையே ரூபா 416,645,328 மற்றம் ரூபா 216,603,735 ஆக காணப்பட்டதுடன், 2022 சனவரி 01 ஆந் திகதி ஆரம்ப மீதியாக கொள்ளும் போது அது முறையே ரூபா 624,941,134 மற்றும் ரூபா 253,022,479 ஆக காணப்பட்டது. இந்த வேறுபாட்டுக்கான காரணங்கள் கணக்கு குறிப்பின் மூலமேனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் 2022.01.01 ஆந் திகதியில் நிலவிய நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ACA-6 மாதிரியின் ஆரம்ப மீதிக்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளில் நிலவிய வேறுபாடுகள் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### (ஆ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளின் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மீதிகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் முற்பணத்தினை அறவீடு செய்தல் மற்றும் செலுத்தல் முறையே ரூபா 45,546,282 மற்றும் ரூபா 46,125,155 ஆக காணப்பட்டதுடன், திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்பு அறிக்கைகளின் பிரகாரம் அது முறையே ரூபா 46,120,398 மற்றும் ரூபா 111,714,067 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | 193-11 மற்றும் 12 இன் மூலம் இடம்பெற்ற காலப்பகுதிக்குரிய வரவு மற்றும் செலவு வைத்தல்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சிற்கு இந்த அமைச்சிற்கு சாட்டப்பட்ட மீதிகளும் உள்ளடங்களாக திறைசேரியின் அச்சீட்டு குறிப்புகளின் பெறுமதிகள் உருவாகியிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### (இ) கட்டுநிதி மீதிகள்

கட்டுநிதி மீதிகளை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 சுற்றறிக்கையின் 7.10 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரியின் அச்சீட்டு குறிப்புடன் கட்டுநிதி இணக்கக் கூற்றின் தரவுகளுக்கிடையிலான | திறைசேரியின் கணக்கு அறிக்கைகளின் பிரகாரம் காண்பிக்கப்படும் மீதிகளில் உள்ளடக்கப்படுவது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் செயற்படும் தொழில் பிரிவு, விளைதிறன் செயலகம் மற்றும் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகம் ஆகியவை | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | வருடம் முழுவதும் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு செப்தம்பர் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு மாத்திரமான கொடுக்கல் வாங்கலாக காணப்பட்டமையும், கட்டுநிதி இணக்கக்கூற்று ACA – 7 இல் மேற்படி அனைத்து நிறுவனங்களினாலும் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ஆகும். | |
| (ii) | தொழில் அமைச்சின் மூலம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியில் ஆண்டினுள் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 951,492,000 உள்ளடக்கப்பட்டிராததுடன், 249/22 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 951,592,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 951,492,000 (ACA-3) மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவினை இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கும் போது ரூபா 100,000 ஆன தொகையால் கணக்காய்வில் வேறுபாடொன்று நிலவுவதாக கூறப்படும் பெறுமதியான ரூபா 951,592,000 ஆன பெறுமதி உருவாகியுள்ளதாக அனுமானிக்கப்படுகின்றது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 26 செலவின விடயங்களுக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,240,000 பெறுமதியான பாதீட்டு ஒதுக்கீட்டில் மீளாய்வாண்டினுள் எதுவித செலவினத்தையும் மேற்கொள்ளாத காரணத்தால் 100 சதவீதமான சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | இராஜாங்க அமைச்சருக்கு மீண்டெழும் செலவின விடயத்திற்காக 193-1-1 செயற்திட்ட நிதியேற்பாடு வழங்கப்படல், எதிர்பார்த்த செலவினங்கள் ஏற்படாமை, செலவின முகாமைத்துவத்தின் அடிப்படையில் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | நிதியேற்பாடு செயற்திறனாக செலவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 20 செலவின விடயங்களுக்க உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 62,600,000 ஆன நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டளவில் ரூபாா 22,717,543 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செலவின விடயங்களின் சேமிப்பானது 50 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | இரு அமைச்சுகளும் ஒருங்கிணைக்கப்பட்டமை, மெஹவர பியச உள்ளக அறை ஒதுக்குவதில் தாமதம் ஏற்பட்டமை, செலவின முகாமைத்துவத்தினால் எஞ்சியிருந்தது. | நிதியேற்பாடுகள் உரிய முறையில் முகாமை செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது 04 செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,900,000 இலிருந்து ரூபா 7,409,750 வரை அதாவது 152 சதவீதத்திலிருந்து 548 சதவீதம் வரையான அளவினால் குறைநிரப்பு மற்றும் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதியேற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. | பதிய அமைச்சின் திருத்தங்களுக்கமைய இரத்துச் செய்யப்பட்டமையின் அடிப்படையில் நிதியேற்பாடு ஒதுக்கப்படல், இராஜாங்க அமைச்சரின் வேதனங்களை செலுத்துவதற்கு உரிய நிதியேற்பாட்டினை ஏற்பாடு செய்ய நேர்கின்றமையால் சேமிப்பு ஏற்பட்டிருந்தது என்பது. | நிதியேற்பாடுகள் உரிய முறையில் முகாமை செய்யப்பட வேண்டும். |

### 2.2 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) சேவையை கைவிட்டுச் சென்ற 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த தொழில் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் 06 உத்தியோகத்தர்களிடமிருந் தும் அறவிட வேண்டிய ரூபா 709,239 ஆன தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிட முடியாது காணப்பட்டது. | கடன் தொகையை அறவீடு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் பிரதான பணியொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகள் மற்றும் ஊழியர் நலன்புரி நிதியத்தினை நிர்வகித்தல் ஆகிய பணிகள் உரிய முறையில் நிறைவேறியிருக்கவில்லை என்பது பின்வரும் விடயங்களின் | | |

அடிப்படையில் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஊழியர் நலன்புரி நிதியத்தின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத ரூபா 282,726,669 தொகையும், தொழில் ஆணையாளரின் பங்களிப்பு கணக்கில் ரூபா 57,174 தொகையுமாக தொழில் திணைக்களத்தின் உப அலுவலகங்களின் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிமையாளரின் கணக்குகளில் தீர்ப்பனவு செய்வதற்கரிய பணிகளை மேற்கொள்ளும் போது சட்ட ஆவணங்களை பாரிய அளவில் பரிசோதிப்பதற்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. இந்த நிதியங்கள் நெடுங்காலமாக முன்கொண்டுவரப்படும் மீதிகள் என்பதால் தீர்ப்பனவு செய்ய சில காலம் எடுக்கும். திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தனிப்பட்ட கணக்குகளுக்கு பணத்தை செலவு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கதற்கு உத்தியோகத்தர்களுக்க அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பங்களிப்பு பணத்தை தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டளவில் தனிப்பட்ட நலன்புரி நிதியம் தொடர்பில் உரிய கண்காணிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | தற்போது தனியார் ஊழியர் நலன்புரி நிதியத்தினை பேணும் பெரும்பாலான நிறுவனங்கள் ஊழியர் நலன்புரிய நிதிய அதிகாரச்சட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நிலவிய நிறுவனங்கள் ஆனமையால் தனியார் ஊழியர் நலன்புரி நிதியங்களை கண்காணிக்கும் பொறிமுறையை மிகவும் வலுவூட்டுவதற்கு அதற்குரிய சட்டத்தின் | தனியார் ஊழியர் நலன்புரி நிதியங்களை கண்காணிப்பதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரிவுகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது இனங்காணப்பட்டுள்ளது. | |
| (iii) | வேலைவாய்ப்புக்காக ஒழுங்குபடுத்தலுக்கான தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையொன்று 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | இந்த கொள்கைகள் உருவாக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்துள்ளமையால் அதனை திருத்தியமைத்து நடைமுறைப்படுத்துவதற்குரிய பிரிவுகளை தொடர்புபடுத்தி தருமாறு பொது நிர்வாக அமைச்சிடமும், மனிதவள அபிவிருத்தியின் போது இலங்கை தேசிய மன்றத்தின் (NHRDC) உள்ளடங்களாக உரிய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை சிறந்த பதில்கள் கிடைக்கவில்லை. | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீடுகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத போது வெளிநாட்டு உதவிகளை பயன்படுத்த நேர்கின்ற போது குறைநிரப்பு மதிப்பீடொன்று அல்லது வீரமன் நடைமுறையின் ஊடாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது ஆசிய உற்பத்தித்திறன் அபிவிருத்தியின் மூலம் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 30,712 ஆன உதவித் தொகை தொடர்பில் | 2022 ஆம் ஆண்டின் போது ஆசிய உற்பத்தித்திறன் அபிவிருத்தியின் மூலம் வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளுக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன், இதுவரையிலும் 2023 ஆம் ஆண்டுக்காக ஆசிய உற்பத்தித்திறன் அபிவிருத்தியின் மூலம் | திறைசேரியின் அறிவுரைகள் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 621(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளுக்காக ரூபா 20 மில்லியனான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மதிப்பீடுகளை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்பார்ப்பின்றி வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதிப்பிரமாணம் 621(6) இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எனது NPS/FMD/03/20 ஆம் இலக்க மற்றும 2022.08.22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிதி மற்றும் பொருளாதார கொள்கைகள் அமைச்சின் செயலாளரிடமிருந்து இது தொடர்பில் அறிவுரை கோரப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய உற்பத்தித்திறன் அபிவிருத்தியின் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளுக்காக ரூபா 20 மில்லியனான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (இ) | நிதிப்பிரமாணம் 625(3) மற்றம் அரச கணக்குகள் சுற்றறிக்கை 30/94 இன் பிரகாரம் நேரடியாக கிடைக்கும் பண அனுப்பல்கள் திறைசேரியின் வைப்பு செய்யப்பட்டு, அந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஆசிய விளைதிறன் அபிவிருத்தியிலிருந்து இரு சந்தர்ப்பங்களில் ரூபா 3,975,914 ஆன உதவிப் பணம் பொது வைப்புக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கிடைக்கும் அனைத்து வெளிநாட்டு உதவி பணங்களும் திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், செயற்திட்ட செலவினம் மேற்படி மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவின விடயத்தின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | மேற்படி |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சுக்கு சொந்தமான ரூபா 18,000,000 பெறுமதியான டொயோட்டா லேன்ட் க்ரூஷர் ஜீப் வண்டிய 2018 ஒக்தோபர் மாதம் முதல் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிராததுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவில் உள்ள மோட்டார் சைக்கிள் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுக்கு சொந்தமான டொயோட்டா லேண்ட் க்ரஷர் ஜீப்பை பழுது நீக்குவது பயனற்றது எனவும் அதனை அப்புறப்படுத்துவதே பொருத்தமானது எனவும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் தெரிவிக்கும் நிலையில், எதிர்வரும் காலங்களில் இந்த ஜீப்பை அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.<br><br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் மோட்டார் சைக்கிளை 2023 ஆம் ஆண்டில கூறுவிலைகளை கோரி அதன் கூறுவிலைகளுக்கமைய பழுதுபார்ப்பது பொருத்தமானதா என்பது குறித்து மேலும் தீர்மானிக்கப்படும். | சொத்துக்கள் செயற்திறனாகவும் திறமையாகவும் முகாமை செய்யப்பட வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கமைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்க சொந்தமான கைவிரலடையாள இயந்திரங்கள் காணப்பட்டதுடன், | இயந்திரம் ஒன்றின் குறைபாடு தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 2022 ஆம் ஆண்டின் மதிப்பாய்வு அறிக்கைகளுக்கமைய இயந்திரம் ஒன்றுக்கான பற்றாக்குறை நிலவியது. காணாமற்போயுள்ள இந்த இயந்திரம் தொடர்பில் நிதிப்பிரமாணம் 103 முதல் 109 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | சோதனைகள் முடிந்த பிறகு, நிதிப்பிரமாணத்தின் படி செயற்பட்டு அவற்றை நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் விருதுகளை வென்றவர்களுக்கு வழங்குவதற்காக 685 விருதுகளுக்காக ரூபா 4,512,123 செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022 யூன் 15 ஆந் திகதி அன்று விருதுகள் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. விருதுகளை ஏற்றுக்கொண்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, இவை சரியான விவரக்குறிப்புகள் உள்ளதா என்று ஒரு அறிக்கை கோரப்பட்டது. மேலும் 2022 செப்தம்பர் 21 ஆந் திகதியிட்ட கடிதத்தின் NPS/PR/06/001 இன் படி, 33 விருது அலகுகளைத் தவிர, மீதமுள்ளவை குறைபாடுள்ளவை என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு உள்ள போது அந்த கேடயங்கள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தற்போதுள்ள சூழ்நிலையை சரிசெய்வதில் உள்ள சிரமம் கருதி, சிறிது தாமதம் ஏற்பட்டாலும், விருதுகள் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் 1 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டு, தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது. | பரிவர்த்தனைகள் மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப செலவினமாக ரூபா 1,465,200 செலவிடப்பட்டு மாதாந்தம் ரூபா 25,000 படியாக பராமரிப்ப செலவினம் ரூபா 1,700,000 தொகையம், ஏனைய செலவினங்களுக்காக ரூபா 133,800 தொகையும் செலவிடப்பட்டு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 4,299,000 கூட்டுப் பெறுமதியுடைய e-breeze செயற்திட்டம் உற்பத்தித் திறன் விருது வழங்கும் விழாவின் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஏனைய எதிர்பார்த்த பணிகளான ஏனைய பணிகளான விழா முகாமைத்துவம் மற்றும் கற்கைகள் முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் நிர்வாகப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டமைப்பை மேலும் பயன்படுத்தாமல் பராமரிப்பதற்குப் பதிலாக, கணினியின் முந்தைய தரவுகள் அனைத்தையும் காப்புப் பிரதி (backup) எடுக்கவும், அதை சரியாகப் பயன்படுத்துவதற்கு புதிய பதிப்பாக (version) கணினியை நிறுவவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கிணங்க, e-breeze கட்டமைப்பில் இதுவரை நிலவிய குறைப்பயன்பாட்டு நிலைமை அல்லாது, மிகவும் சிறந்த பயன்பாட்டின் ஊடாக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அதிகபட்ச கடமைச் செயல்திறனுக்காகப் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதை நான் மேலும் தெரிவிக்க விரும்புகின்றேன். | கட்டமைப்பை திறமையாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உற்பத்தித்திறன் செயலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த 639 உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக உரிய முறையிலான கடமை கையளிப்பொன்றோ தலைமை அலுவலகத்தின் முறையான கண்காணிப்போ இடம்பெற்றிருக்கவில்லை. | சம்பள அதிகரிப்புகளை வழங்குவதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பில் கணினி சமர்ப்பிப்பு ஒன்று பரீட்சிக்கப்படுகின்றது. பதவியணி மீளாய்வு வேலைத்திட்டமொன்றுக்காக உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | உத்தியோகத்தர்களின் கண்காணிப்பு மற்றும் பணி ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) 2022 ஆம் ஆண்டின் போது தொழில் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 449 | 298 | 151 |
| (ii) | மூன்றாம் நிலை | 908 | 665 | 243 |
| (iii) | இரண்டாம் நிலை | 5,049 | 4,800 | 249 |
| (iv) | ஆரம்ப நிலை | 858 | 704 | 154 |
| **மொத்தம்** | | **7,264** | **6,467** | **797** |

**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**

வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளக்கூடிய பணிகள், அதாவது வெற்றிடங்களை நிரப்புவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, பட்டதாரி ஆட்சேர்ப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கணிசமான எண்ணிக்கையிலான பட்டதாரி பயிலுனர்கள் இரண்டாம் நிலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளனர். ஆட்சேர்ப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம், வெற்றிடங்களை நிரப்புவது இடைநிறுத்தப்பட்டுள்ளதால், பல்நோக்கு அபிவிருத்தி செயலணியில் இருந்து ஊழியர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

நிர்வாக பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.